Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 6, 2022

வெள்ளிக்கிழமை, 6 மே 2022 | ஒளி: 07 கதிர்: 298 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free




# 3 நாள்களுக்கு 3 மணி நேரத்துக்கு மேல் மின்வெட்டு

எரிபொருள் மற்றும் நீர் பற்றாக்குறை காரணமாக இன்று (06) முதல் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 3 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அந்த நான்கு நாள்கள்...




# எதிர்க்கட்சியினர் காட்டிக்கொடுத்துவிட்டனர்



பா.நிரோஸ்

எதிர்க்கட்சியினர் எனக்கு ஆதரவாக வாக்களிப்பதாகக் தீர்மானத்திருந்தபோதிலும், இறுதியில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கு மற்றொருவரின் பெயரை அவர்கள் முன்மொழிந்ததன் ஊடாக, மக்கள் போராட்டத்தை எதிர்க்கட்சியினர் காட்டிக்கொடுத்துள்ளதாக பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிடி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கப்ராலின் பயணத்தடை மே 23 வரை நீட்டிப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை உத்தரவை மே மாதம் 23 ஆம் திகதி வரை நீட்டிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று (05) கட்டளையிட்டதுடன் அன்றையதினம் மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# இன்று பாரிய ஹர்த்தால்

## பஸ்கள் இயங்காது; கடைகள் மூடப்படும்.

பல தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் இன்று (06) முன்னெடுக்கவுள்ள ஹர்த்தாலுக்கு பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புகள், பல்கலைக்கழக சங்கங்கள், சிவில் மற்றும் அரச துறையின் சங்கங்கள் என சகலரும் இன்றைய ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர். அதேபோல் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் வகையில், நேற்று (05) நள்ளிரவு முதல் பஸ் சேவைகளை இயக்குவதிலிருந்து விலகுவதற்கு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

# பிரதி சபாநாயகராக ரஞ்சித் மீண்டும் தெரிவு

**ரஞ்சித்துக்கு -148**
**இம்தியாஸுக்கு -65**
**நிராகரிப்பு- 03**
**வாக்களிக்காதோர் - 8**

பிரதி சபாநாயகர் தெரிவுக்காக நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், ரஞ்சித் சியம்பலாபிட்டிய 83 மேலதிக வாக்குகளைப் பெற்று மீண்டும் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# ஐ.எம்.எப் உதவி வெறும் கனவே

பா.நிரோஸ்

மகோஸின் பாதையை தெரிவு செய்வதா அல்லது கடாபியின் பாதையை தெரிவு செய்வதா என்கிற இரு வழிகளே ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துக்கு உள்ளதாக சபையில் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி என்பது இலங்கைக்கு வெறும் கனவாகவே இருக்குமெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பதுக்கிய பணத்தை கொண்டுவரும் வேலைத்திட்டம் என்ன?



பா.நிரோஸ்

மோசடியான வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் இலங்கையில் கொள்ளையடிக்கப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2

# "அதிருப்தியாளர்களின் நாடகம் அம்பலமானது"



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திலிருந்து தாம் விலகிவிட்டதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினர் மற்றும் சிலர் அண்மைக்காலங்களில் அரங்கேற்றிய நாடகம் என்பது, இன்று அம்பலப்படுத்தப்பட்டு உள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சங்கம்

# வி.ஐ.பி சேவைகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானம்

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான தீர்வு எட்டப்படும் வரை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உட்பட நாட்டிலுள்ள அனைத்து விமான நிலையங்களிலும் சில சேவைகளிலிருந்து இன்று (06) முதல் விலக்கிக் கொள்வதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கம், நேற்று (05) அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# நிதி, நீதி இல்லாத நாட்டில் நிதிக்கும் நீதிக்கும் அமைச்சர்

## மன்னிப்பு கோருவதில் பயனில்லை என்கிறார் ஹக்கீம்

பா.நிரோஸ்

நிதி அமைச்சர் சபைக்கு வந்து அரசாங்கத்தின் பிழைகளுக்கு மன்னிப்பு கோருவதன் மூலம் எதுவும் நடக்கப்போவதில்லை. நிதி இல்லாத நாட்டுக்கு நிதி அமைச்சர் என்றும் நீதி இல்லாத நாட்டுக்கு நீதி அமைச்சர் என்றும் நகைச்சுவையாக பலர் நிதி அமைச்சரை விமர்சிக்கின்றனர் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


கடவுச்சீட்டு விண்ணப்பத்தை ஏற்காததால்

# அலுவலகங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம்

கணினி அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தற்காலிகமாக இடைநிறுத்தியதால், சேவை பெறச் சென்றவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# நிரந்தர வீதித் தடைகளை அகற்றுமாறு மனுத்தாக்கல்



கொழும்பு மற்றும் கொள்ளுப்பிட்டி பிரதேசங்களில் உள்ள நிரந்தர வீதித் தடைகளை அகற்றுமாறு பொலிஸ்மா அதிபர் உட்பட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி சிவில் செயற்பாட்டாளர்களால், உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனு நேற்று (05) தாக்கல் செய்யப்பட்டது.

கம்பஹாவைச் சேர்ந்த ஷெனால் ஜயசேகர மற்றும் சமூக ஆர்வலர் ஹேமந்த விதானகே ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

மனுவில் பொலிஸ்மா அதிபர், கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மனித உரிமைகள்

தொடர்ச்சி P2

# பாராளுமன்றத்தை மக்கள் தீயிட்டுக் கொளுத்துவர்



பா.நிரோஸ்

மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவில்லை எனத் தெரிவித்து ஒருநாள் நிச்சயமாக இப்பாராளுமன்றத்தை மக்கள் தீயிட்டுக்கொளுத்துவார்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்ததோடு, ஜனாதிபதியால் ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு செ

தொடர்ச்சி P2

# அலியும் பீரிஸுமே ஆளும் தரப்பை ஏமாற்றினர்

## ஆளுந்தரப்பு எம்.பியான கெவிந்து குமாரதுங்க கொதித்தெழுந்தார்

பா.நிரோஸ்

ஜனாதிபதியை ஏமாற்றி அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து ஜனாதிபதியின் மீது இந்த நாட்டின் 69

தொடர்ச்சி P2

# ஆளுங்கட்சியின் கைப்பொம்மை ரஞ்சித்

பா.நிரோஸ்

ஆளுங்கட்சியின் கைப்பொம்மையாகவே பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிடி மாறியுள்ளதாக சபையில் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கப்ராலின் பயணத்தடை மே 23வரை நீட்டிப்பு

கப்ராலை கடந்த 02ஆம் திகதியன்று மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும், அன்றையதினம் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதிக்காக தான் ஆஜராகியிருப்பதால், தனது சேவை பெறுநர், மன்றில் ஆஜராக வேண்டும் என்று முந்தைய நீதிமன்ற உத்தரவுக்கு அவசியமில்லை என்று சிரேஷ்ட சட்டத்தரணி ஜீவந்த ஜயதிலக்க மன்றுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த தனிப்பட்ட மனு ஒன்றின் பிரகாரம் கப்ராலுக்கு எதிரான உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2005 முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு, 10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.எம்.எப் உதவி வெறும் கனவே

பாராளுமன்றம் நேற்று (05) வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்களில் 70 சதவீதத்தை மீள செலுத்த முடியாதென அரசாங்கம் அறிவித்துள்ளது. நாடு வங்குரோத்தடையும் என நீண்டக்காலதுக்கு முன்னர் இருந்தே நாம் எச்சரித்து வந்துள்ளோம். வங்குரோத்தடைந்த நாட்டை மீள கட்டியெழுப்புவது இலகுவான ஒன்றல்ல. இலங்கையை விட செல்வந்த நாடான கிறீஸ் 2010ஆம் ஆண்டு வங்குரோத்தடைந்தது. எனினும் இன்றுவரையில் அந்நாட்டால் மீண்டுவர முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

ஓர் அரசாங்கத்தை விரட்டிவிட்டு மற்றுமோர் அரசாங்கத்தைக் கொண்டுவருவதல்ல பிரச்சினை. இப்போது முழு ஆட்சியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இத்தனைக்காலம் இலங்கைக் கடைப்பிடித்துவந்த கலாசாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனாலேயே ஜனாதிபதி, 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்கு செல்ல வேண்டுமென இளைஞர்கள் கூறுகிறார்கள் என்றார்.

## ஆளுங்கட்சியின்..

சுயாதீனமாக இருந்துகொண்டு பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுபவர்கள் யார் என்பதை இன்று மக்கள் கண்டுகொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் தெரிவுக்குப் பின்னர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி தொடர்ந்து உரையாற்றிய அவர், இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் பலரின் செயற்பாடுகள் முழுநாட்டுக்குமே வெளிப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியில் இருப்பதாகக் கூறிகொண்டு மக்களை ஏமாற்றிவந்த நாடகத்தை மக்கள் இன்று காணக்கூடியதாக இருந்தது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு ரஞ்சித் சியம்பலாபிட்டிக்கு வழங்கப்படுமென கூறியதாலேயே, பிரதி சபாநாயகர் தெரிவுக்கு நாம் மற்றொரு பெயரை முன்மொழிந்தோம். அரசாங்கத்தின் கைபொம்மையாக ரஞ்சித் சியம்பலாபிட்டி மாறியுள்ளார் என்பது தெளிவாகிறது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்குள் நடைபெறுவது அனைத்தும் அரசியல் விளையாட்டுக்களே என்பது போராட்டக்காரர்களுக்கு இன்று தெளிவாக தெரிந்திருக்கும். எதிர்க்கட்சியாக நாம் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக இருக்கிறோம் என்பதும் இன்றைய வாக்கெடுப்பின்போதும் தெளிவாக தெரிகிறது எனவும் எதிர்க்கட்சி தலைவர் கூறினார்.

## அலுவலகங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம்

தொழில்நுட்ப கோளாறு காரணமாக, பத்தரமுல்லையில் உள்ள அதன் தலைமை அலுவலகம் உட்பட அதன் அனைத்து அலுவலகங்களிலும் இந்த இடைநிறுத்தம் அமுலில் இருக்கும் என்று திணைக்களம், நேற்று (05) காலை அறிவித்தது. கண்டி மற்றும் வவுனியா அலுவலகங்களுக்கு சேவைகளைப் பெற வந்தோரும் ஏமாற்றமடைந்ததுடன், மக்கள் எதிர்ப்பும் வெளியிடப்பட்டது. ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவை வசதிகளின் கீழ் கடவுச்சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சேவை பெற வந்தோர் எதிர்ப்பை வெளியிட்டு நடத்திய ஆர்ப்பாட்டம் 1 மணி நேரம் வரை நீடித்ததுடன், இதன் காரணமாக 174 மற்றும் 177 பஸ் வழித்தடத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தொழில்நுட்ப கோளாறுகளை சீர்செய்து, சேவைகளை முன்னெடுக்கும் பணியில் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

## நிரந்தர வீதித் தடைகளை அகற்றுமாறு மனுத்தாக்கல்

ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள அலரிமாளிகை மற்றும் கோட்டையை அண்மித்த பகுதிகளில் பொலிஸாரால் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர வீதித் தடைகள் பொதுமக்களின் அடிப்படை உரிமையான நடமாடும் சுதந்திரத்தை மீறுவதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வீதித்தடைகளின் காரணமாக பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்று பாரிய ஹர்த்தால்

இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நடத்த 200க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன. இதன்போது ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களிலும் இன்றைய வெள்ளிக் கிழமை சில சேவைகள் நிறுத்தப்படும் என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அதேபோல் யாழ் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்பினர், பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர். அத்துடன் ஆசிரியர் சேவியர் சங்கத்தினரும் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையில் நிலவும் டீசலுக்கான கடும் தட்டுப்பாடு, பொது போக்குவரத்தின் செயல்பாடுகளை பாதிக்கிறது என்றும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை பாதித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இன்றைய தினத்துக்கான அனைத்து ஆசன முற்பதிவுகளையும் இரத்து செய்து, சேவைகளை நிறுத்துமாறு அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் சங்கம் வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளதாக அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. மக்கள் அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் ஹர்த்தாலில் அனைத்து ஊழியர்களும் பங்கேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

ஹர்த்தாலில் பங்குபெற தீர்மானித்துள்ளதாக இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## “அதிருப்தியாளர்களின் நாடகம் அம்பலமானது”

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து ஒரு சில பதிவுகளை இட்டுள்ள அவர், ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயரை பிரதி சபாநாயகர் பதவிக்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையானது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாட்களில் அரங்கேற்றிய நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளது எனவும், சியம்பலாப்பிட்டியவுக்கு பதிலாக சியம்பலாப்பிட்டியவே தெரிவாகியுள்ளார், அதேபோல் இந்த நட்டான் உண்மையான எதிர்க்கட்சி 65 பேரை கொண்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட அரசாங்கம் நடத்தும் நாடகம் தெளிவாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## வி.ஐ.பி சேவைகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானம்

அனைத்து சர்வதேச விமான நிலையங்களின் விசேட வர்த்தக பிரமுகர்கள் மற்றும் விசேட பிரமுகர்கள் முடிவிடங்களின் நுழைவாயில்களில் கடமையில் ஈடுபடும் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் செயல்பாடுகளை நிறுத்துவார்கள் என்று சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணும் தேசிய வேலைத்திட்டத்தை ஆட்சியாளர்கள் வகுத்து திட்டவட்டமான தீர்வை வழங்கும் வரை இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேலும் பல தொழிற்சங்கங்கள் கடமைகளில் இருந்து விலகி ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அலியும் பீரிஸூமே ஆளும் தரப்பை ஏமாற்றினர்

69 லட்சம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை உடைத்தமைக்கு காரணமான நீதியமைச்சர் அலி சப்ரி அப் பதவியில் இருந்து விலகவேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் எம்.பி.யான கெவிந்து குமாரதுங்க வலியுறுத்தினார்.

19ஆவது திருத்தத்தை நீக்கி கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்தம் தொடரில் அப்போது ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும், அமைச்சர் ஜி.எல் பீரிஸூமே அரசாங்க எம்.பி.க்கள் அனைவரையும் ஏமாற்றினர் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் நேற்று (5) வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

19ஆவது திருத்தத்தை நீக்கி கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்தம் தொடரில் அப்போது ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும், அமைச்சர் ஜி.எல் பீரிஸூமே அரசாங்க எம்.பி.க்கள் அனைவரையும் ஏமாற்றினர்.

ஜனாதிபதியையும் ஏமாற்றி 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்த அன்றைய நீதியமைச்சர் அலி சப்ரி, இன்று அதே நீதியமைச்சராக மீண்டும் 21ஆவது அரசியலமைப்பை கொண்டு வரப்போவதாக கூறுகிறார்.

## நிதி,நீதி இல்லாத நாட்டில்...

பாராளுமன்றத்தில் நேற்று (5) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நிதி இல்லாத நாட்டுக்கு நிதி அமைச்சர் என்றும் நீதி இல்லாத நாட்டுக்கு நீதி அமைச்சர் என்றும் நகைச்சுவையாக பலர் நிதி அமைச்சரவை விமர்சிக்கின்றனர். அதனால் நிதி அமைச்சரின் உரைதொடர்பாக எனக்கு பரிதாபமே இருந்தது. ஏனெனில் அரசாங்கத்தில் இருந்து எதிர்க்கட்சிக்கு வந்து சுயாதீனமாக செயற்படுவதாக தெரிவிக்கும் 42பேரையும் திருப்திப்படுத்த வேண்டிய தேவையும் அவருக்கு ஏற்பட்டிருப்பதை உணர முடியுமாக இருந்தது.

## பாராளுமன்றத்தை மக்கள் தீயிட்டுக் கொளுத்துவர்

அவர் எங்கு இருக்கிறார் என்பதே தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) உரையாற்றும் போதே ர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்ற அமர்வு பலத்தப் பாதுகாப்புக்கு மத்தியிலேயே கூடுகிறது. மக்களின் குரல் பாராளுமன்றத்தில் பிரதிப்பலிக்கவில்லை. இதனாலேயே இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்போடு பாராளுமன்றத்தைக்கூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக பாராளுமன்றத்தில் உள்ள நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டும். இதுபோன்ற பாராளுமன்றத்தால் மக்களுக்கு எந்தவிதமானப் பிரயோசனங்களும் இல்லை எனவும் தெரிவித்தார்.

## 3 நாட்களுக்கு 3 மணி நேரத்துக்கு மேல் மின்வெட்டு

அதன்படி, ‘ஏ’ முதல் ‘டபிள்யூ’ வரையிலான 20 வலயங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை 20 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. .

## எதிர்க்கட்சியினர் காட்டிக்கொடுத்துவிட்டனர்

பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டமைக்கு நன்றி கூறி உரையாற்றிய அவர், அரசாங்கத்தில் வகித்து வந்த அனைத்து அமைச்சரவைப் பதவிகளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விலகி சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்து எதிர்க்கட்சியின் பக்கம் அமர்ந்துள்ளோம். பிரதி சபாநாயகர் பதவி சுயாதீனமானது என்ற போதிலும் ஆளுங்கட்சியில் இருக்கும்போது எனக்கு இப்பதவி வழங்கபட்டது என்பதால் அப்பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்திருந்தேன் என்றார்.

மீண்டும் பிரதி சபாநயகர் எதிர்க்கட்சியின் முழு ஆதரவோடு என்னை தெரிவு செய்வதற்கே எதிர்க்கட்சியினர் இணக்கம் தெரிவித்திருந்தார்கள். இன்று காலை சபை அமர்வு ஆரம்பிக்கும் வரையில் எதிர்க்கட்சியினர் அந்த நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள். எதிர்க்கட்சியின் பலத்தைக் காட்டுவதற்காக இந்த வாய்ப்பை பயன்படுத்தி இருக்கலாம். எனினும் அதனை எதிர்க்கட்சி தவறவிட்டிருப்பது கவலையளிக்கிறது என்றார்.

பிரதி சபாநாயகர் பெயருக்கு மற்றொருவரின் பெயரை எதிர்க்கட்சியினர் முன்மொழிந்ததன் ஊடாக அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கி போராடும் மக்களின் போராட்டத்தை எதிர்க்கட்சியினர் காட்டிக்கொடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தார். எதிர்க்கட்சியின் ஊடாகவே நான் பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன் என்பதை ஆளுந்தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பிரதி சபாநாயகராக ரஞ்சித் மீண்டும் தெரிவு

அரசாங்கத்துக்குள் எழுந்த முரண்பாடுகளை அடுத்து அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி வெளியேறுவதாக கூறியதை, வகித்த சகல பதவிகளில் இருந்தும் விலகுவதாக சுதந்திர கட்சியினர் தெரிவித்தனர். அதற்கமைய பிரதி சபாநாயகர் பதவியை வகித்த சியம்பலாப்பிட்டிய தனது பதவியை இராஜினாமா செய்தார், எனினும் குறித்த இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்கவில்லை.

தனது இராஜினாமாவை ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் கொடுத்தார். அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் புதிய பிரதி சபாநாயகர் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்த பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட வேளையில் சியம்பலாப்பிட்டியவையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் மும்மொழிந்தது.

எதிர்க்கட்சியின் சார்பில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்ரின் பெயர்கள் முன்மொழியப்பட்டது. இருவரில் ஒருவரை தெரிவு செய்ய வாக்கெடுப்பு நடத்தப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் ஆதரவுடன் மீண்டும் 148 வாக்குகளை பெற்று சியம்பலாபிட்டிய மீண்டும் பிரதி சபாநாயகராக தெரிவானார்.

## பதுக்கிய பணத்தை கொண்டுவரும் வேலைத்திட்டம் என்ன?

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசாங்கத்தின் தொலைநோக்கற்ற மற்றும் மோசடியான முகாமைத்துவம் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பசி மற்றும் வாழ்க்கைச் செலவால் மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். ஒவ்வோர் இடங்களிலும் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் நடத்பதப்படுகின்றன. ஆனால் அரசாங்கம் இன்னும் நித்திரையிலேயே உள்ளது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. இதனால் அரசாங்கத்திடம் சில கேள்விகளுக்கு பதில்களை எதிர்பார்க்கின்றேன்.

நாட்டில் இப்போது வேலையில்லாதோர் வீதம் எவ்வளவு? நாட்டின் சனத் தொகையில் எத்தனை வீதிமான மக்கள் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

2022 மார்ச் மாதமளவில் மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அரச கடன் எவ்வளவு? தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் உயர் வருமானம் பெறுபர்களுக்கு வரிச் சலுகை வழங்கியதால் அரசாங்கம் இழந்த வருமானம் எவ்வளவு? 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடங்களில் கடனுக்காக வழங்கப்படும் வட்டி எவ்வளவு?

இதேவேளை 2022 இல் பயன்படுத்தக் கூடிய உண்மையான வெளிநாட்டு நாணய கையிருப்பு எவ்வளவு? சீன கடன் உதவியில் வழங்கப்பட்ட 10 பில்லியன் யுவனை வழங்கும் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் எவை?

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு அத்தியாவசிய மருந்து, உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட டொலரில் மிகுதி எவ்வளவு? 750 மில்லியன் டொலரை இரும்பு இறக்குமதிக்கு பயன்படுத்தப்படுவதாக வெளியாகியுள்ள செய்தி உண்மையா?

கடந்த காலங்களில் அடிக்கடி இடம்பெற்ற மின்சார தடை காரணமாக தொழிற்சாலைகளில் மின்சார பாவனை எத்தனை வீதத்தால் குறைவடைந்துள்ளது.

விலைகள் அதிகரிக்கப்பட்டமையினால் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் எந்தளவுக்கு வருமானத்தை ஈட்டியுள்ளது. இன்னும் எவ்வளவு ரூபாவினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும். தற்போது உருவாகியுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையை நிறைவு செய்து மக்களுக்கு போதுமான அளவு எப்போது விநியோகிக்கப்படும் உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும்

# 65 பேர் மட்டுமே உள்ளனர்



## “148 பேர் ராஜபக்ஷர்களுடனேயே தற்போதும் உள்ளனர்” –சாணக்கியன்

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளதாகவும் 148 பேர் ராஜபக்ஷர்களுடனேயே தற்போதும் உள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) உரையாற்றிய அவர், பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட, நடத்தப்படும் நாடகங்கள் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார். ஏனென்றால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை தெரிவு செய்வார்களென தான் நினைக்கவில்லை என அவர் கூறினார்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு வாக்களித்து, அவரை பிரதி சபாநாயகராக தெரிவு செய்த 148 பேரும் தற்போதும் ராஜபக்ஷர்களுடனேயே இருக்கிறார்கள். எனவே, அவரை எதிர்த்து போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கிர் மாக்காருக்கு வாக்களித்த 65 பேர் மட்டுமே மக்கள் பக்கம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பாராளுமன்றத்தில் என்ன நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் இங்குள்ள நாடகக்காரரர்கள் பொய்யர்கள்; அதற்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்றும் ஏனென்றால் அவர்களுக்கு ராஜபக்ஷர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற தேவை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தரவுகள் இல்லாது ஐ.எம்.எப் சென்றுள்ளார்

பா.நிரோஸ்



நாட்டில் ஏற்பட்டுள்ள பாரதூரமான பிரச்சினைகள் எதனையும் தெரிந்து கொள்ளாமலும், அது தொடர்பான எந்தவிதமான தரவுகளும் இல்லாமலே சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி அமைச்சர் அலி சப்ரி சென்றுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின்சார துண்டிப்பால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு எவ்வளவு என்பது உள்ளிட்ட நாட்டின் பாரதூரமான பிரச்சினைகள் தொடர்பான தரவுகள் எதையும் தெரிந்துக்கொள்ளாமல் சர்வதேச நாணய நிதியத்துக்கு அலி சப்ரி சென்றுள்ளார்.

இம்முறை பெரும்போகத்துக்கு தேவையான உரம் இருக்கிறதா? உரத்தை எவ்வளவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்போகிறீர்கள்? என்கிற கேள்விக்கு பதில் இருக்கிறதா எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த விவசாயத்துறை அமைச்சர் ஜனக வக்கும்புர, விவசாயத்துக்கு தேவையான உரம் தற்போது காணப்படுகிறது. அதனை நாம் தற்போது விவசாயிகளுக்கு வழங்குவோம் எனவும், இந்தியா, சீனாவிடமும் தற்போது உரமில்லை. எவ்வாறாயினும் யூரியா உரத்தை வழங்க இந்தியா இணங்கியுள்ளது. மேலும் உரத்தடையால் நட்டமடைந்த விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.



## பாராளுமன்றத்தின் கௌரவம் இல்லாதுபோகும்

பா.நிரோஸ்

ஆளுங்கட்சியிலிருந்து பிரதி சபாநாயகர் பதவிக்கு ஒருவரை தெரிவு செய்ய முடியாத நிலையே ஏற்பட்டுள்ளதாக சபையில் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு பாராளுமன்றத்துக்குள் தீர்வை வழங்க முடியவில்லை. அடுத்த வாரத்திலும் தீர்வு இல்லை என்றால், பாராளுமன்றத்தின் கௌரவம் இல்லாதுபோகும் எனவும் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு பெயர் ஒருவரை தெரிவு செய்ய முடியாத நிலை ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. பிரதி சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்ட இருவருமே அப்பதவிகளுக்கு பொருத்தமானவர்கள். எவ்வாறாயினும் பிரதி சபாநாயகராக எதிர்க்கட்சியிலிருந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்றத்துக்குள் பிரிந்து செயற்படக்கூடாது. ஒன்றிணைந்து அனைவரும் செயற்பட வேண்டும் என்றே மக்கள் கோருகிறார்கள். அதுபோல ராஜபக்ஷ குடும்பத்தினர் மாத்திரமே வீட்டுக்கு செல்ல வேண்டுமென மக்கள் கூறுகிறார்கள். மாறாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள அனைவரும் செல்ல வேண்டுமென கூறவில்லை.

நாட்டில் பாரிய பொருளாதார பிரச்சினை காணப்படுகிறது. இதனை புரிந்துகொண்டு பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இல்லை என்றால் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் இங்கேயும் வருவார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு இவ்வாரத்திலும் பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படவில்லை. அடுத்த வாரத்திலாது தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லை என்றால் பாராளுமன்றத்தின் கௌரவம் இல்லாதுபோகும். எம்மால் முடிந்ததையாவது பாராளுமன்றத்துக்குள் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.




### இரகசியத்தை அம்பலப்படுத்தினார்

பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் பங்கேற்று வாக்களித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வாக்களித்ததன் பின்னர், வாக்குச்சீட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் காண்பித்து, “இரகசியம் இல்லை” என்றார்.
அதேபோல, எதிரணியின் பக்கமாக நின்றிருந்தவாறு வாக்குச்சீட்டை தூக்கி காண்பித்து, “எந்த இரகசியமும் இல்லை” என்றார்.
அப்போது, ஆளும் கட்சியில் இருந்த சில, “எதிரணியினர் இரகசியத்தை பற்றி பேசுகின்றனர். எனினும், இரகசியத்தை பாதுகாக்க தெரியவில்லை” என்றனர்.

## திருநடேசனின் இல்லத்தில் சஜித்தின் தாயை சந்தித்தது யார்?

பா.நிரோஸ்



திருநடேசனின் இல்லத்தில் சஜித்தின் தாயாரை சந்தித்து யார் என சபையில் கேள்வி எழுப்பிய மொஹமட் முஸம்மில் எம்.பி, எதிர்க்கட்சியினரின் ஒற்றுமையை இல்லாதொழிக்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ‘டீல்’ அரசியல் செய்வதாகவும் தெரிவித்தார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே பாராளுமன்றத்தைக்கூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் ஆளுந்தரப்பினரும் எதிர்க்கட்சியினர் அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றி, அரசாங்கத்தைப் பதவி விலக்கினால், புதிய அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தயாராக இருக்கிறாரா? அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைக்க அவர் தயாராக இருக்கிறாரா? என இதன்போது வினவினார்.

## போராட்டக்காரர்கள் புதிய கட்சியில் வருவர்

பா.நிரோஸ்



பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு செல்ல முடியும் என்றால் இன்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கல்விமான்கள், தொழில் நிபுணர்கள், இளம் தலைமுறையும் தமது பிரதிநிதித்துவத்தை ஏதேனும் ஒரு கட்சியின் ஊடாக வெளிப்படுத்த முடியும். தற்போதைய கட்சிகளின் மீது நம்பிக்கை இல்லையென்றால் புதிய கட்சியொன்றை உருவாக்கி பாராளுமன்றத்திற்கு வர முடியும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரத்ன சபையில் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து நேற்று(5) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதைத் தாண்டி பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்ற யோசனையை அரசாங்கமே கொண்டுவர வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்தால் எதிர்க்கட்சியாக நாம் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரிப்போம் எனக் கூறினார்.

நாட்டில் பாரிய உணவு பஞ்சம் ஏற்படப்போகின்றது, உணவு நிவாரணம் கேட்டு இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பிரதிநிதிகளை அனுப்புங்கள் என ஒரு மாதத்துக்கு முன்னரும் கூறினோம். அரசாங்கம் இதனை இன்னமும் கவனத்தில் கொள்ளாதுள்ளது. இப்போதாவது உணவு கேட்டு அரசாங்கம் பிரதிநிதிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## எப்போது விவாதத்துக்கு வரும்?

### எதிர்க்கட்சி சபையில் கேள்வி

பா.நிரோஸ்

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகின்றீர்கள் என்பதனை சபாநாயகர் அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் நேற்று(5) ஒழுங்குப் பிரச்சினைகளை முன்வைத்தே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன்போது ஹர்ஷன ராஜகருண எம்.பி கூறுகையில், முழுநாடும் அரசியல் பிரச்சினையையே பார்த்துக்கொண்டிருக்கின்றது. அடுத்த வாரத்திலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கவும். கூடிய விரைவில் இதனை செய்ய வேண்டும். இதன்மூலம் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துங்கள் என்றார்.

ஹரீன் பெர்ணான்டோ தெரிவிக்கையில், இப்போது பாராளுமன்றத்திற்கு வரும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டுள்ளது. பெருமளவான மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

## அமைதிகாக்க மாலிக்கு செல்கிறது இராணுவம்

மேற்கு ஆபிரிக்க நாடான மாலி இராஜ்ஜியத்தில் ஐ.நா அமைதிகாக்கும் பணிகளுக்காக மே இரண்டாம் வாரமளவில் இலங்கை இராணுவ வீரர்கள் குழுவொன்று பயணிக்கவுள்ளது. இவ்வாறு புறப்பட்டுச் செல்லவிருக்கும் இராணுவ வீரர்களால் சம்பிரதாய பூர்வமாக இராணுவ தளபதியவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு குருவிட்ட கெமுனு ஹேவா படையணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

243 பேரைக் கொண்ட இக்குழுவில் கெமுனு ஹேவா படையணியினர் அதிகளவில் உள்ளடங்கியிருப்பதோடு, இலங்கை கவச வாகனப் படையணி, இலங்கை பொறியியல் சேவை படையணி, இலங்கை சமிக்ஞை படையணி, மின்சார மற்றும் இயந்திர பொறியியல் படையணி, பொறியியல் சேவை படையணி, இலங்கை இராணுவ சேவைப் படையணி, இலங்கை இராணுவ போர்க் கருவிகள் படையணி, இலங்கை மின்சார மற்றும் இயந்திர பொறியியல் படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் படையணி,



இலங்கை இராணுவ வைத்திய படையணி, இலங்கை இராணுவ பொதுச் சேவை படையணி ஆகியவற்றின் சிப்பாய்களும் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்களில் 20 அதிகாரிகளும் 208 படையினரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி வீரர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்ட பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, ஒழுக்க நெறிமுறைகளுக்கமைய செயற்படுமாறு அறிவுரை வழங்கியிருந்ததோடு, வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தருவதற்கு அவர்கள் கொண்டுள்ள இயலுமைக்கும் பாராட்டு தெரிவித்தார்.



## மக்களே! டீசலை சேமிக்காதீர்கள்

பா.நிரோஸ்



நாட்டுக்கு தேவையான பெட்ரோல் கையிருப்பில் உள்ளது. எனினும் தேவையான அளவு டீசல் கையிருப்பில் இருந்தாலும் மின் உற்பத்திக்கு அதனை வழங்க வேண்டும் என்பதால், டீசல் விநியோகச் செயற்பாடுகளில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக சபையில் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் காஞ்சன வீஜேசேகர, டீசலை மக்கள் சேமித்து வைக்க வேண்டாமெனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (5) எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக எரிபொருளை விற்பனை செய்வதால் நாளாந்தம் 1,613 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. உலக சந்தையிலிருந்து அதிக விலைக்கு எரிபொருளைப் பெற்று உள்நாட்டில் குறைந்த விலைக்கே அதனை நாம் விநியோகிக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

வாழ்வாதாரத் திட்டங்களைக் குழப்புவது மக்களை

# படுகுழிக்குள்ளே தள்ளும்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

நாடு இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதர சிக்கலில், மக்களுக்காக உருவாக்கப்படுகின்ற சுய பொருளாதார வாழ்வாதாரத் திட்டங்களைக் குழப்புவது, மக்களை மென்மேலும் படுகுழிக்குள்ளே தள்ளும் என இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

வாகரை மீன் வளர்ப்புத் திட்டம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு விளக்கமளிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த சில நாள்களுக்கு முன்னர் கோறளைப்பற்று - வடக்கு வாகரை பிரதேசத்தில் உருவாக்கப்படும் மீன் வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கச் சென்ற வேளையில் 'பயனீட்டாளர்கள் தெரிவில் தாங்கள் உள்ளீர்க்கப்படவில்லை' என்கின்ற ஆதங்கங்களை ஒரு சிலர் முன்வைத்தனர்.

"அவ்வேளையில்,



பொதுமக்களுக்குள் எழுந்த வாக்குவாதங்களை அடுத்து, குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பிற்போடப்பட்டு, பயனீட்டாளர்கள் தெரிவை மீள் பரிசீலிக்குமாறு, அதிகாரிகளை பணித்துள்ளேன்.

"மேற்படி சம்பவத்தை தொடர்ந்து அங்கு நடந்த விடயங்களை திரிபுபடுத்தி சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அதன்விளைவாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாளேந்திரனின் ஆதரவாளர்களுக்கும் எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கும் இடையே கடுமையான வாதப் பிரதிவாதங்கள் சமூக வலைத்தளங்களில் நடந்துவருகின்றன.

"கருத்து முரண்பாடுகளை ஆரோக்கியமான உரையாடல்கள் ஊடாக தீர்த்துக்கொள்வதற்குப் பதிலாக சமூக வலைத்தளங்களில் முட்டிமோதும் பிரச்சினையாக வாகரை மீன் வளர்ப்புத் திட்ட விடயம் மாறி வருகின்றமை வேதனைக்குரியது.

"சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள இத்திட்டமானது கிராமிய சிறு முதலீட்டாளர்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பிரித்து வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டிருந்தது. இதனுடாக அவர்களைச் சார்ந்த 60 குடும்பங்கள் பயனடைவதோடு, சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதாகவும் இத்திட்டம் அமையவுள்ளது.

"அத்தோடு, ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் வளரும் எம் குழந்தைகளின் நிறையுணவை பேணும் வகையிலும் இம்மீன் வளர்ப்புத்திட்டமானது வாகரை போன்ற பகுதிகளுக்கு வரப்பிரசாதமாகும். அது தடங்கலுக்குள்ளாகக் கூடாது" என்றார்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலக

# செயற்பாடுகள் இடைநிறுத்தம்

## கடவுச்சீட்டை பெற மக்கள் திண்டாட்டம்

■ க.அகரன்




தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் நடைபெறாது என பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பை குறித்த திணைக்களம் வழங்கியிருந்தது.

எனினும், கடவுச்சீட்டைப் பெறுவதற்காக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தின் முன்பாக அதிகளவான மக்கள், நேற்று (05) கூடினர்.

கணினி கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக, கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு, நேற்று முன்தினம் (04) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, பின்னர் வழமைக்குத் திரும்பியதாக கொழும்பு தலைமை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கணினி கட்டமைப்பில் நேற்று மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனால் கடவுச்சீட்டை பெற வந்த மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தின் வாயிலில், செயற்பாடு இன்று இடம்பெறாது என அறிவுறுத்தல் வழங்கியும் கடவுச்சீட்டை பெறுவதற்கு மக்கள் அதிகளவில் காத்திருந்தனர்.

இலங்கையை சீனா

# கைப்பற்றி விடுமா?

■ வ. சக்தி

இலங்கையை சீனா கைப்பற்றி விடுமோ என்ற பயம் எனக்குள்ளது என்று அருட்தந்தை ஜோசம் மேரி அடிகளார் தெரிவித்துள்ளார். தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மதத்தலைவர்களின் ஆலோசனைகள் எனும் தொனிப்பொருளில் நேற்றைய (05) ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில், சீனா, திபத் நாட்டைக் கைப்பற்றியது போல் இலங்கையையும் கைப்பறிவிடுமோ என்ற பயம் உள்ளது. எனவே எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க இறைவழிபாடே தேவை.

நாட்டில் எங்கெங்கெல்லம் அநீதிகள் இடம்பெறுகின்றதோ அதற்கு எதிராக கிறிஸ்தவ மதத் தலைவர்கள் என்ற ரீதியில் குரல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். எமது நாட்டில் இன்று நேற்றல்ல பல்லாண்டு காலமாக அரசியல் ரீதியாக பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இது வடகிழக்கில் மிகவும் மோசமான பிரச்சினைகள் இருந்தன. அப்போதும்கூட அஹிம்சை வழியில் தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிராம் செய்தார்கள். 1958 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கச்சேரியில் சத்தியாக்கிரகம் செய்தவர்களை இராணுவம் இழுத்துக் கொண்டு சென்று ஆலையடிக் சவக்காலையில் வைத்து அடித்தார்கள் என அருட்தந்தை ஜோன் ஜோசம் மேரி மேலும் தெரிவித்தார்.






## வித்தியாரம்ப விழா

இவ்வருட கல்வியாண்டுக்கு அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நிகழ்வுகள், நேற்று (05) நடைபெற்றன. அந்தவகையில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திலும் புதிய மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் ஏ.ஆர். முகைதீன் பாவா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி. கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.ஏ.ஜாபீர் கரீம், எம்.ஐ.அஹ்ஸாப் ஆகியோர் உட்பட, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (எச்.எம்.எம். பர்ஸான்)



# கஜமுத்துகளுடன் ஒருவர் சிக்கினார்



■ ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான்

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகம்பை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கஜமுத்துகளை விற்பனை செய்ய முற்பட்ட ஒருவர், விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் (04) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, கஜமுத்துகள் விற்பனைக்காக அறுகம்பை தனியார் விடுதி ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட போது, அப்பகுதியை சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் சூட்சுமமான முறையில் சந்தேகநபருடன் உரையாடி, அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து யானை கஜ முத்துகள் -07, சிற்பி முத்துகள் - 06 என்பன கைப்பற்றப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருமலை அரசாங்க அதிபர்

# கடமைகளை பொறுப்பேற்பு

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச். என்.ஜயவிக்ரம, தமது கடமைகளை மாவட்டச் செயலகத்தில் நேற்று (05) உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நாடு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள இந்நிமனத்துக்கான பொறுப்புகளை இன, மத, மொழி வேறுபாடின்றி செயலாற்றவுள்ளதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.



போத்தல் குத்து சம்பவத்தின்

# சந்தேக நபர்கள் சரண்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்களில் இருவர், நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இரு இளைஞர்கள் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் போத்தல் குத்தில் முடிவடைந்ததில், திக்கம் பகுதியை சேர்ந்த குணசேகரம் குணசோதி (வயது 25) எனும் இளைஞன் உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் நால்வரை அடையாளம் கண்டிருந்தனர்.

அவர்களை கைது செய்வற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், அல்வாய் பகுதியைச் சேர்ந்த இருவர், பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்துள்ள இருவரும் அன்றைய தினம் பிரதான சந்தேகநபருடன் மது அருந்திய நபர்கள் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.



இந்திய துணைத் தூதுவர்

# யாழ். பல்கலைக்கு விஜயம்

■ எம்.றொசாந்த், எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மரியாதை நிமித்தமான விஜயமொன்றை, நேற்று முன்தினம் (04) மேற்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவை சந்தித்து, தற்கால நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அத்துடன், இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# கசிப்பு உற்பத்தி; இருவர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை மற்றும் நவாலி பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 70 லீற்றர் கசிப்பு, ஒன்றே முக்கால் லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை சுற்றிவளைத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைது செய்ததுடன்



அவர்களிடம் இருந்து சான்றுப் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள மானிப்பாய் பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு

# குளத்தில் மிதந்த சடலம் மீட்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, தீர்த்தக்கரை வேளாங்கண்ணி தேவாலயத்துக்கு அருகிலுள்ள கொட்டுறுட்டி குளத்தில் மிதந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிராம மக்களால் சடலம் மிதப்பது குறித்து, முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் கிராம சேவையாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் குறித்தான விவரங்களை பொலிஸார் தேடி வருகின்றனர். இவர் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த மூன்று நாள்களாக 73 வயதுடைய மாரிமுத்து என்ற வயோதிபரை கிராமத்தில் இருந்து காணவில்லை என மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

# இருவர் மீது வாள்வெட்டு

■ எஸ்.தில்லைநாதன்


நல்லூர், கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக வைத்து இருவர் மீது, நேற்று முன்தினம் (04) இரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3 மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன்பாக இருவர் மோட்டார் சைக்கிள்களில் நின்று கதைத்துக் கொண்டிருந்த போது, அங்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன், மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்திவிட்டுத் தப்பித்தனர்.

கல்வியங்காடு, செங்குந்தா



மைதானம் தொடர்பான பிணக்கே இந்தத் தாக்குதலின் பின்னணியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை தேயிலை உற்பத்தியில்

# 23 வருடங்களின் பின்னர் பாரிய வீழ்ச்சி



உரத்தடை மற்றும் உக்ரேன் போரால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 23 வருடங்களில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள்) தெரிவித்துள்ளன.

நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாக தேயிலை உள்ளது. தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன், ஆண்டுக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலரை இது ஈட்டி வந்தது.

எனினும், தற்போது 1948 இல் சுதந்திரத்துக்குப் பிறகு மிக மோசமான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு உர இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதுடன், 2021 நவம்பர் மாதம் முதல் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான காலக்கட்டத்தில் உற்பத்தி 18 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க கைகொடுக்குமாறு

# அண்ணாமலையிடம் இ.தொ.கா கோரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உதவிகளை செய்வதற்கு, இந்தியா தொடர்ந்து முன்வர வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலையிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இதற்கிணங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன், இது தொடர்பில் கலந்துரையாடி, இலங்கைக்கு தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மின்சாரத் துண்டிப்பும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் இந்தியாவின் உதவிகள் தொடர்ந்தும் இலங்கைக்கு கிடைக்க வேண்டுமென்று இ.தொ.கா தலைவர் வலியுறுத்தினார்.

இலங்கை தற்போது முகங்கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் தமிழக பா.ஜ.க தலைவர் கே.அண்ணாமலை நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தவம் கிடந்த வாகனங்களுக்கு

# டீசல் கிடைத்தது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பல நாள்களுக்குப் பின்னர், ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை எரிபொருள் கூட்டுத்தாபன களஞ்சியசாலையிலிருந்து ஹட்டன் நகருக்கு எரிபொருள் நேற்று (5) விநியோகிக்கப்பட்டுள்ளது.

டீசலைப் பெற்றுக்கொள்வதற்காக பஸ்கள் உள்ளிட்ட பெருமளவான வாகனங்கள் சில தினங்களுக்கு முன்பிருந்தே, எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நேற்றைய தினம் டீசல் விநியோகிக்கப்பட்டது. அதனையடுத்து பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் ஈடுபட்டனர்.



இளைஞர், யுவதிகளுக்கான

# பொருளாதார மேம்படுத்தல் வேலைத்திட்டம்

■ என்.ஆராச்சி

தெஹியோவிட்ட பிரதேச செயலகம், எட்டியாந்தோட்டை பிரதேச செயலகம் ஆகிய பிரிவுகளுக்கு கீழ் உள்ள பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் வேலைத்திட்டம், மக்கள் அபிவிருத்தி மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தெஹியோவிட்ட பிரதேச செயலகத்தின் கீழ், சப்புமல்கந்த, பம்பேகம ஆகிய தோட்டங்கள், எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்தின் கீழ் ஹல்கொல்ல, பூணுகல ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 40 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு, இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் முதலாவது வேலைத்திட்டமானது, நேற்று முன்தினம் (4) சப்புமல்கந்த தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன், இங்கு தொழிற்பயிற்சிகளில் ஈடுபடும் இளைஞர், யுவதிகளுக்குத் தேவையான நிதியுதவியும் வழங்கப்பட்டது.



# ஹர்த்தாலுக்கு ஆசிரியர்கள் ஆதரவு

■ ரா.கமல்

இன்று நாடளாவிய ரீதியில் அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ள ஹர்த்தால் நடவடிக்கைக்கு பூரண ஆதரவைத் தெரிவிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அதிகூடிய அரச ஊழியர்களாக உள்ள ஆசிரியர்கள், கடந்த 28ஆம் திகதி போராட்டத்திற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். அதேபோன்று இன்று (06) அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோககர்களும் சுகவீன விடுமுறையை அறிவித்து, பாடசாலைகளை நடத்தாது தம் எதிர்ப்பினை வெளிப்படுத்துவர் என்றார்.

அத்துடன் தத்தமது பிரதேசங்களில் இடம்பெறும் போராட்டங்களில் அனைத்து அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் தவறாது கலந்துகொண்டு, எமது பலத்தை வெளிப்படுத்துவதோடு, அரச எதிர்ப்பு பதாகைகளையும் காட்சிப்படுத்தி, பொது உடைமைகள், தனியார் உடைமைகள் எதையும் பாதிக்காத வகையில் இப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளனர்.



## முதலாவது இலக்கியக்களம்...

கேகாலை மாவட்டத்தின் முதாவது இலக்கியக்களம் மே மாதம் 3ஆம் திகதி, எஹலியகொடை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் முதற்கட்டமாக கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் அனுசரணையுடன் பாடசாலையில் கல்விகற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியைக் கருத்தில்கொண்டு, மறுசீரமைக்கப்பட்ட ஐந்து வீடுகள் கையளிக்கப்பட்டன. (கமல்)

நுவரெலியா பிரதேச சபையில்

# சேவல் சுயாதீனம்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபையில் மொட்டு கட்சியுடன் இணைந்து, ஆளும் கட்சியாக செயற்பட்டு வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சபையில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளது.

நுவரெலியா பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (05) காலை நடைபெற்றது.

இதன்போது ஆளும்தரப்பு சபை நடவடிக்கைகளில் சுயாதீனமாக செயற்படும் என்ற பிரேரணையை சபை உறுப்பினர்களிடத்தில் தவிசாளர் வேலு யோகராஜ் முன்வைத்தார்.

இதனை நுவரெலியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஆளும்,எதிர்க்கட்சிகளை சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஏகமானதாக ஏற்றுக்கொண்டு, தவிசாளர் முன்வைத்த பிரேரணக்கு ஆதரவு வழங்கினர்.



நாட்டில் இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை மக்கள் முன்னெடுத்து வரும் நிலையில், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்களின் நலனை கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கத்தின் பங்காளி கட்சியிலிருந்தும், வழங்கி வந்த ஆதரவிலிருந்தும் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அரசாங்கத்துக்கு எதிராக

# டயகமவிலிருந்து நடை பயணம்

## இதுவரை இருவர் கொழும்புடன் இணைந்தனர்

■ துவாரகஷான்

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, டயகம, சந்திரிகாமம் தோட்டத்தில் இருந்து, கொழும்புக்கான நடைபயணத்தை ஒருவர் ஆரம்பித்தார்.

சந்திரிகாமம் தோட்டத்தைச் சேர்ந்த 33 வயதான புஸ்பநாதன் தியாகு என்பவரே, நேற்று (5) காலை 08 மணியளவில் தனது, நடை பயணத்தை ஆரம்பித்தார். இவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

காலிமுகத்திடலில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், 178 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லும் பயணத்தினை ஆரம்பித்தார்.

இவரின் நடை பயணம் வெற்றி பெற வேண்டுமென தோட்டத்திலுள்ள 150 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கோவிலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியதுடன், சிதறுதேங்காய் உடைத்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து தேசிய கொடியை ஏந்தி, நடை பயணத்தை தியாகு ஆரம்பித்தார்.

இவருக்கு ஆதரவு தெரிவித்த தோட்ட மக்கள், டயகம நகரம் வரை பேரணியாக வருகை தந்தனர்.

கொழும்பு நோக்கி பயணம் செய்யும் நபருக்கு ஆதரவாக, நகரத்தில் உள்ள வர்த்தகர்கள் பிரதேச மக்கள் அமோக வரவேற்பு வழங்கினார்கள்.

இதேவேளை அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த வாரம் இராகலை மற்றும் தலவாக்கலையிலிருந்து இருவர் கொழும்புக்கான நடைபயணத்தை ஆரம்பித்து, நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேலைநிறுத்தத்துக்கு

# நாமும் முழு ஆதரவு

தொழிற்சங்க வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழுமையான ஆதரவு வழங்கும் என சங்கத்தின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை காரியாலயத்தில் நேற்று (05) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக நாடு பூராகவும் மக்கள் தங்களுடைய எதிர்ப்பை நாள்தோறும் தெரிவித்துக் கொண்டே இருக்கின்றார்கள். எது எவ்வாறாக இருப்பினும் கூட, பதவி போதையில் அரசாங்கத்துக்கு 'காதும் கேட்கவில்லை கண்களும் தெரியவில்லை'.



பொருளாதார நெருக்கடியால் நாடு பாரியதொரு பின்னடைவை எதிர்நோக்கி இருக்கின்றது என நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த அரசாங்கத்திற்கு மீண்டும் ஓர் அழுத்தத்தை கொடுக்கும் நோக்கத்துடன், நாளைய தினம் (இன்று) நடைபெறவுள்ள வேலை நிறுத்த போராட்டத்திற்கு, மலையக மக்களும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தங்களுடைய முழுமையான ஆதரவை வழங்குகின்றது. அரசியல் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவோம் என தெரிவித்துள்ளார்.

**"ஏது எவ்வாறாக இருப்பினும் கூட, பதவி போதையில் அரசாங்கத்துக்கு 'காதும் கேட்கவில்லை கண்களும் தெரியவில்லை'**

# ஒப்புதல் வாக்குமூலமளிக்கும் ஆளுந்தரப்பினர்

தாங்கள் செய்யாததை செய்ததாகக் கூறி, பலவந்தமாக பெறப்படும் வாக்குமூலமே ஒப்புதல் வாக்குமூலமாகும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலரிடம், பலவந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்றே, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களின் ஊடாக குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு, பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பத்தை பெற்றுக்கொள்வதற்காக, சந்தேகநபர்கள் பல்வேறு வகைகளிலும் துன்புறுத்தப்பட்டுள்ளனர். இவையெல்லாம் கடந்தகாலங்களில் கேள்விப்பட்டவை. பெரும்பாலும் சிங்களத்தில் எழுதப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களில் தமிழர்களே கையெழுத்திட்டுள்ளனர். ஏனெனில், பயங்கரவாத தடைச்சட்டம் ஓர் இனத்தை மட்டுமே குறிவைத்துக்கொண்டிருந்தது.

மிரிஹானவில் ஜனாதிபதியின் பிரத்தியேக வாசஸ்தலத்துக்கு அருகில் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தப்படபோதுதான், அரசாங்கத்தின் சுயரூபம் அம்பலமானது. அதாவது, அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது.

ஒவ்வொன்றுக்காகவும் வரிசையில் நின்றிருந்தவர்களின் இரத்தம் கொதிப்படைந்து கோபம் கொந்தளித்ததன் வெளிப்பாடே இன்றைய போராட்டங்களின் பின்னணியாகும். இவற்றுக்கெல்லாம், அரசாங்கத்தின் பொருளாதார நிர்வாகத்திறனில் ஏற்பட்டிருந்த சீர்குலைவே காரணம். முழு நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டமைக்கு, தங்களால் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் காரணமாகும் என ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சர்கள் அறிவித்திருந்தனர்.

இரசாயன உரத்தை தடைச்செய்தது தவறென ஜனாதிபதி கோட்டாபயவும், வரியை குறைத்தமையால் பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்துவிட்டோமென நிதியமைச்சர் அலி சப்ரியும் முன்னாள் நிதியமைச்சர் கே.என் சொக்ஸியை தவிர, எந்தவொரு நிதியமைச்சரும் மக்களின் நலன்சார்ந்த வரவு- செலவுத்திட்டத்தை தயாரிக்கவில்லை என ஆளும் கட்சியின் எம்.பியான பந்துல குணவர்தனவும் தெரிவித்திருந்தனர்.

தெரிவித்திருந்தனர் என்பதற்கு அப்பால், மக்கள் படும் துன்பங்களுக்கான காரணங்களை குறிப்பிட்டு, ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளனர். நமது நாட்டு அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது காலந்தாழ்த்தி, மழுங்கடிக்கச் செய்துவிடுவதில் மகா கெட்டிக்காரர்கள். இறுதியில் அரச அதிகாரிகளே குற்றவாளிகள் ஆக்கப்பட்டுவிடுவர்.

பிரதி சபாநாயகர் தெரிவுக்காக நேற்று (05) இரகசிய வாக்களிப்பு நடத்தப்பட்டது. அதில், வழங்கப்பட்ட வாக்குச்சீட்டில் வாக்களிப்பவரின் பெயர் எழுதப்பட்ட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. அப்படியெனில், அதிலிருக்கும் 'இரகசியம்' என்ன? இதுகூட அச்சுறுத்தும் ஓர் ஆயுதமாகும்.

சட்டவாக்க சபைக்குள் இருப்போர், தாங்கள் சிக்கிக்கொள்ளாத வகையிலேயே சட்டங்களுக்குள் ஓட்டை வைத்துவிடுவர். நாட்டு மக்கள் துன்பப்படுவதற்குக் காரணம், தங்களால் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் என பகிரங்கங்கமாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராக, நீதிமன்றத்தை நாடமுடியாமை வெட்கக்கேடாது.

பலவந்தப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெறமுடியாது என்பதை இறுக்கப்படுத்தி, பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலமளிப்போருக்கு எதிராக சட்டத்தை நாடி, தீர்வு கண்டால், பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் என்பதே எமது அவதானிப்பாகும்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

முடிந்த விடயங்களை, முடிவில்லாமல் தொடர்ந்து பேசக்கூடாது. இவை, மனஎரிச்சலை உருவாக்கி, கோபத்தில் முடிந்து, காலவிரயத்தை ஏற்படுத்துகின்றன.

சில பிரச்சினைகள் உருவானால், மாற்று வழிகளைத் தேடுக. குழப்பத்துடன் எந்த முடிவுகளையும் எடுக்க முடியாது. தவறுகளை ஒருவரிடம் சுமத்துவதாலேயே, பிரச்சினைகள் உருவாகின்றன.

மன்னித்து விடுவதும் தவறுகளை ஏற்றுக்கொள்வதும், விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றன. ஒவ்வொரு பொழுதும் கவனத்துக்கு உரியதுதான். சின்னத் தவறு நடந்துவிட்டாலும், பிறர் ஊதிப்பெரிதாக்கி விடுவார்கள்.

அவதானமாகப் பேசுங்கள்; அவை காற்றுடன் கலந்து, பல செவிகளுக்குள் புகுந்து கொள்ளலாம். இரகசியம் சொல்கின்றேன் என எவருடன் பேசினாலும், அது எதிர்மறையான கருத்துகளை உருவாக்கிவிடலாம். உங்களுக்குத் தெரிந்தால் எதையும் சொல்லலாகாது; தேவையற்ற சங்கதிகளைக் கேட்கவிரும்புவது தவறானது. அதனால் என்ன பயன்?

குழப்பங்களைத் தவிர்க்க பேச்சைக் குறைப்பது மிக நல்லது. எவருடனும் முரண்படுதல் நாகரிகமற்ற செயலாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மாற்றத்தை எங்கிருந்து தொடங்குவது?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்று இலங்கையர்கள் வீதிக்கு இறங்கியுள்ளார்கள்; போராட்டக்காரர்கள் காலிமுகத்திடலை நிறைத்திருக்கிறார்கள். தெய்வேந்திர முனை முதல் பருத்தித்துறை வரை, சங்கமன்கண்டி முதல் கற்பிட்டி வரை, நாலாபக்கமும் இருந்து கோட்டாவை வீட்டுக்குப் போகச் சொல்லும் குரல்கள் ஒற்றுமையுடனும் ஆழமாகவும் கோபமாகவும் ஒலிக்கின்றன.

ஆனால், அது நடப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் காணவில்லை. ஒரு பொருளாதார நெருக்கடியின் விளைவால் தோற்றம்பெற்ற போராட்டங்கள், இன்று அக்கட்டத்தைத் கடந்து, ஒரு மக்கள் இயக்கமாக உருவாகுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

இந்த மாற்றமும் இலங்கையின் ஜனநாயக அரசியலின் அடித்தளமாய்க் கொள்ளப்படும் பாராளுமன்றின் இயலாமையும், இலங்கையின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் ஒளிக்கீற்றையும் அந்தகாரத்தையும் ஒருங்கே கோடுகாட்டுகின்றன.

கடந்த செவ்வாய்கிழமை, இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில், 'ஊழல் எதிர்ப்பு குரல்' ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அரசியல்வாதிகள் செய்த பாரிய மோசடிகள், ஊழல்கள் தொடர்பான விரிவான தகவல்களை வெளிப்படுத்தினார்.

இதில், நாட்டின் பொதுச் செல்வங்களை கொள்ளையடித்த அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் மோசடிகள், ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டன. இதில், கட்சி வேறுபாடு இன்றி அனைவரும் ஊழல்களில் ஈடுபட்டுள்ளமை புலனாகிறது. குறிப்பாக, மாற்றுச்சக்தியின் தலைவராகப் பலரால் கருதப்படும் சஜித் பிரேமதாஸவின் ஊழல்களும் ஜே.வி.பியால் அம்பலப்படுத்தப்பட்டன.

இலங்கையில், ஊழல்கள் தொடர்பில் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்துள்ளபோதும், அவை பெரும்பாலான மக்களின் கவனத்தைப் பெறவில்லை. இப்போதைய சூழல் அதற்கு வாய்ப்பாக உள்ளது. இலங்கையில் ஊழல், நிறுவனமயப்பட்டுள்ளது என்ற உண்மையை நாம் ஏற்றாக வேண்டும்.

இன்று ஜே.வி.பியின் அம்பலப்படுத்தல்களைக் கண்டு பொங்குவோர் பலருண்டு. இவர்கள், இலஞ்சம் கொடுக்க மறுத்தவரை 'உலக நடப்புப் புரியாதவர்' என்றும் வாங்க மறுத்தவரை 'வாழத் தெரியாதவர்' என்றும், ஊழலுக்குகெதிராகக் குரல்கொடுத்தவரை 'இடஞ்சல்காரன்' என்றும் சொல்லிக் கேலிசெய்திருந்தார்கள்.

இன்று, எத்தனை இலங்கையர்களால் கம்பீரமாகத் தலையை உயர்த்தி, "நான் இதுவரையும் இலஞ்சம் கொடுக்கவில்லை- வாங்கவில்லை" என்று சொல்லவியலும்? மாற்றம், எம் ஒவ்வொருவரில் இருந்தும் தொடங்க வேண்டும்.

மஹிந்தவும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே கொள்ளையடித்தது போலவும் ஐக்கிய தேசிய கட்சியினர் யோக்கியவான்கள் போலவும் ஒரு தோற்றம் எழுப்பப்படுகிறது. அதன் தொடர்ச்சியாகவே சஜித் பிரேமதாஸ மாற்றுத் தலைவராக முன்வைக்கப்படுகிறார். தனது அரசாங்கத்தில், தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சராக சரத் பொன்சேகா இருப்பார் என்றும் இலங்கை சிங்கள-பௌத்த நாடு என்றும் அவர் அண்மையில் தெரிவித்திருந்தார். ராஜபக்ஷர்களின் ஆட்சிக்கும் சஜித்தின் மாற்றுத் தலைமைத்துவம் எனக் கருதப்படும் போக்குக்கும் வேறுபாடுகள் இல்லை என்பது, இவை போன்ற இன்னும் பல அண்மைக்கால நடத்தைகளின் தொடர்ச்சி உறுதி செய்கிறது.

இன்றைய நெருக்கடிக்குத் தலைகளை மாற்றுவது குறித்தே நாம் பேசுகிறோம்; சிந்திக்கிறோம். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த அனைவரும், இன்றைய நெருக்கடிக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

பாராளுமன்றம், இலங்கை ஜனநாயகத்தின் காவலன் என்ற தகுதியை இழந்துவிட்டது. எமது பாராளுமன்றமும் அரசியலமைப்பும் எவ்வளவு ஏதேச்சாதிகாரமானது என்பதை பலர் வலியுறுத்தி வந்தாலும், இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இலங்கை மக்களில் பெரும்பான்மையோரின் கோரிக்கையை ஏற்க மறுக்கும் பாராளுமன்றாலும் ஜனாதிபதியாலும் இதைச் சாத்தியமாக்கிய அரசியலமைப்பாலும் என்ன பயன்? வாக்களிக்கும் அதிகாரத்துக்கு அப்பால் மக்களிடம் எதுவுமே இல்லை. இப்போது அதிகாரம் யாரின் கைகளில் இருக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்க வேண்டுமா, இல்லையா?

இன்னமும் பாராளுமன்றத்துக்குள் தீர்வைக் கோரும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் அனைத்தையும் சாத்தியமாக்கலாம் என்று வேதம் ஓதும் சாத்தான்கள் எம்மிடம் இருக்கவே செய்கிறார்கள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் சீரழிவை, நம்முன்னே காணும் வாய்ப்பு இப்போது வாய்த்திருக்கிறது. மக்களை ஒடுக்கும், அடிப்படை உரிமைகளை மறுக்கும் சட்டங்களை ஏகபெரும்பான்மையோடு நிறைவேற்றிய பாராளுமன்றத்தின் மீது, நம்பிக்கை வைப்பது எவ்வளவு முட்டாள்தனமானது? ஆனால், அதைப் பலரும் செய்கிறார்கள். "225 பேரும் வீட்டுக்குப் போங்கள்" என்ற கோரிக்கை, பலருக்கு அபத்தமாகப்படுகிறது. அக்கோரிக்கையில் நியாயம் இல்லை என்கிறார்கள். இன்று, நெருக்கடி தொடங்கி 28 நாள்களாகிற நிலையில் இந்தப் பாராளுமன்றத்தால் என்ன செய்ய முடிந்தது?

புதன்கிழமை (04) பாராளுமன்றில் பேசிய நிதியமைச்சர், "வரிகள் அதிகரிக்கப்பட வேண்டும்" என்றும் "2019ஆம் ஆண்டு வரிச் சலுகைகளை வழங்கியது தவறு" என்றும் பேசியிருக்கிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்தவுடன் வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் யாருக்கானவை? அவை செல்வந்தர்களுக்கும் பெருவியாபாரிகளுக்கும் பாரிய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. அரசுக்கு வரவேண்டிய வரிப்பணம், செல்வந்தர்களின் பைகளை நிறைத்தது. இதுகுறித்து எப்போதாவது பேசியிருக்கிறோமா?

இப்போது அதிகரிக்க உத்தேசித்துள்ள வரிகள், யார் மீதானவை? இலங்கையில் இன்னமும் ஏன் செல்வந்த வரிகள் (wealth tax) குறித்துப் பேசப்படுவதில்லை.

இன்றைய நெருக்கடிக்குத் தீர்வுகளை முன்மொழிவோரில் பெரும்பான்மையானோர், செல்வந்தர்களிடம் மேலதிகமாக வரி அறவிடுவது பற்றிப் பேசுவதில்லை. மாறாக, இலங்கையின் பொருளாதாரக் கட்டுமானத்தில், அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நிறுத்த வேண்டும் என்று தொடர்ந்து சொல்லிவருகிறார்கள்.

இலங்கை அரசு சமூகநலத் திட்டங்களுக்கு ஏராளமான பணத்தைச் செலவழிப்பதாலேயே பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகிறது என்று வாதிடுகிறார்கள். மத்திய-தர மனோநிலை கேட்டுக்கேள்வியின்றி இதை ஆமோதிக்கிறது. ஆனால், செல்வந்தர்கள் மீது ஏன் ஒழுங்கான வரிவிதிப்பு நடைபெறவில்லை என்ற கேள்வியை கேட்பதில்லை.

இலங்கையின் தேசியம், நாட்டுப்பற்று பற்றி, இலங்கையின் பெருமுதலாளிகள் வாய்கிழியக் பேசுவதைக் காண்கிறோம். "எல்லோரும் நாட்டில் இருக்க வேண்டும். இந்நெருக்கடி நேரத்தில், வெளிநாடுகளுக்கு செல்வது தேசத்துரோகம். நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இந்நெருக்கடிகள் தற்காலிகானமாவை" என்றெல்லாம் தொடர்ந்து சொல்லிவந்திருக்கிறார்கள். ஆனால், பெருந்தொற்றைத் தொடர்ந்த நெருக்கடியின் போது, இதே பெருமுதலாளிகள் தங்கள் மூலதனத்தை பிறநாடுகளுக்கு இடம்பெயர்த்தார்கள். இதுதான் அவர்களின் தேசப்பற்று.

இந்த இடப்பெயர்வால் இலங்கையில் வேலையிழந்தவர்கள் பலர். ஆனால், பெருமுதலாளிகளுக்கு என்றுமே இலாபமே முக்கியமானது. இலாபத்துக்காகத்தான் இப்போதைய அரசுக்கும் அவர்கள் முட்டுக்கொடுத்தார்கள். அதே இலாபத்துக்காகத்தான் இப்போது போராட்டங்களுக்குச் சார்பாக அறிக்கை விடுகிறார்கள்.

அண்மையில் வெளியான அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆவணச்சித்திரம், ஹம்பாந்தோட்டை மருத்துவமனை அமைப்பதில் நடைபெற்ற ஊழலை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இதில் கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில், ஊழலின் பங்காளிகளாக வெளிநாட்டு நிறுவனங்களும் உள்ளன என்பதாகும்.

இன்று இலங்கைக்கு நிதி வழங்குவோர் யார்? அதற்கான நிபந்தனைகள் என்ன? அரச சொத்துகள் எவ்வாறெல்லாம் கைமாறுகின்றன போன்ற வினாக்கள் பதிலற்றுக் கிடக்கின்றன. ஏனெனில், நாட்டை நடத்துவதற்கு எவ்வாறேனும் நிதியிருந்தால் போதும் என்ற மனநிலை பொதுமையாக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தும் இலங்கை யாருக்கானது என்ற வினாவை எழுப்புகின்றன. இலங்கை மக்களுக்கானது. மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு அப்பால், இலங்கையின் குடிமக்களாகச் செயற்படத் தவறியதன் விளைவுகளையே இன்று அனுபவிக்கிறோம் என்ற உண்மை விளங்க வேண்டும்.

இலங்கை வாக்காளர்கள், தங்களது நீண்ட அரசியல் உறக்கத்தில் இருந்து துயிலெழுவதற்கான வாய்ப்பு இப்போது உருவாகியுள்ளது. இனியாவது தேர்தல் காலங்களில், வாக்குறுதிகளுக்கும் பிரச்சாரங்களுக்கு இரையாகி, வாக்களித்துவிட்டு வேடிக்கை பார்க்கும் கொடுங்காரியத்தை செய்யாமல் இருக்க வேண்டும்.

வாக்காளர் என்ற நிலையில் இல்லாமல், நாட்டின் குடிமக்களாக அரசியல் விழிப்புணர்வோடு, நியாயங்களுக்கும் உரிமைகளுக்கும் குரல் எழுப்புவோராக மாற்றமடைதல் வேண்டும். அதன் முதற்படியே இப்போது நாம் காணும் தொடர்ச்சியான போராட்டங்கள்.

அனைத்திலும் மேலாக சமூகப்பொறுப்புள்ளவர்களாக, சகமனிதன் மீது அக்கறைகொண்டவர்களாக குடிமக்கள் இருத்தல் வேண்டும். இது எளிமையாக, குப்பையை உரிய இடத்தில், உரிய முறையில் போடுவதில் தொடங்குகிறது. இன்று நாம் கோருகின்ற மாற்றம், நம் ஒவ்வொருவரிடமிருந்தும் தொடங்கட்டும்!

## கடிதங்கள்

### பொத்துவிலில் ஒசுசலவின் தேவை

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் (ஒசுசல) கிளையைத் திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒசுசல கிளை இல்லாமையால், தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில், சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை, பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து கொள்கின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில், பொத்துவில் பிரதேசத்தில் அரச ஒசுசல திறக்கப்பட வேண்டும் என்று பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை. இதனால், மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே, விரைவில், பொத்துவில் பிரதேசத்தில் அரச ஒசுசல திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

எம்.எஸ்.எம். ஹனீபா

சென்னை

இலங்கை மக்களுக்கு

# ம.தி.மு.க சார்பில் ரூ.13 இலட்சம் உதவி

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (ம.தி.மு.க) சார்பில் ரூ.13 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

"கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி உணவு மற்றும் அடிப்படைத் தேவைப் பொருட்கள் கிடைக்காமல் பரிதவிக்கின்ற இலங்கை மக்களுக்கு, தமிழக அரசு சார்பில் மனிதாபிமான அடிப்படையில் நிதி மற்றும் பொருள் உதவி அளிப்பது என முதலமைச்சர் அறிவித்து இருந்தார்.



அவரது வேண்டுகோளை ஏற்று, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த நிதி வழங்கப்பட்டது. தமிழக அரசு தலைமைச் செயலகம் புனித ஜோர்ஜ் கோட்டையில் முதலமைச்சர்ஸ்டாலினை, வைகோ உள்ளிட்டோர் சந்தித்து நிதியைக் கையளித்தனர்.

புதுடெல்லி

## தாஜ்மஹாலை புனிதப்படுத்த முயன்ற துறவி கைது



அயோத்தியில் ராம் ஜானகி மடத்தின் தலைவர் துறவி பரமஹன்ஸ் தாஸ், தனது இரண்டு சீடர்களுடன் ஏப்ரல் 27 இல் ஆக்ரா வந்திருந்தார். இவர், இந்தியாவில் இந்து ராஜ்ஜியம் அமைத்து, முஸ்லிம்களை நாட்டை விட்டு வெளியேற்ற வலியுறுத்தி, இரண்டு முறை அயோத்தியில் உண்ணாவிரதமும் இருந்தவர்.

பரமஹன்ஸுக்கு, தம் கையிலிருந்த இரும்பாலான பிரம்ம தண்டத்துடன் தாஜ்மஹால் உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், அயோத்திக்கு திரும்பியவர் நேற்று (5) தாஜ்மஹாலினுள் சாதுக்கள் சபையை நடத்தி, அதை புனிதப்படுத்த உள்ளதாக அறிவித்தார். இதற்காக தமது சீடர்கள் அனைவரும் தாஜ்மஹாலுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் தாஜ்மஹாலின் மசூதியினுள் நேற்று முன்தினம் (03) நடந்த ரம்ஜான் தொழுகையின் போது பரமஹன்ஸ் மீண்டும் ஆக்ரா வந்தார். காலை 8 மணிக்கு தாஜ்மஹாலுக்குள் நுழைய முயன்ற அவரை நண்பகல் 12 மணிவரை பொலிஸார் சமாதானப்படுத்தி திருப்பி அனுப்ப முயன்றனர்.

இது முடியாமல் போகவே, கைது செய்யப்பட்ட பரமஹன்ஸ், ஆக்ரா அரசு விருந்தினர் மாளிகையில் வைக்கப்பட்டார். இவருடன் இரண்டு சீடர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



**மீன்பிடி திருவிழா**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி தொட்டியம்பட்டி, ஊராட்சி ஜெ.ஜெ.நகர் பின்புறம் உள்ள தாழ்பாய் கண்மாயில் மீன்பிடி திருவிழா நடைபெற்றது.

ருத்ராபூர்

இறந்த தந்தையின் ஆசை:

## தொழுகை நடத்த இந்து சகோதரிகள் நில தானம்

உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள ருத்ராபூர் அருகே பெயில்ஜுடி என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள தேலா ஆற்று பாலம் அருகே மசூதியை ஒட்டி, தொழுகை நடத்தும் மைதானம் (ஈத்கா) 4 ஏக்கரில் உள்ளது. இங்கு ரம்ழான் உட்பட ஈத் பண்டிகை காலத்தில் சுமார் 20,000 முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபடுவர்.

இந்த இடத்துக்கு அருகே, லாலா பிரிஜ்னந்தன் பிரசாத் ரஸ்தோகி என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது.


இவர் அனைத்து மதங்களையும் மதிக்கக்கூடியவர். இவர் தனது நிலத்தின் ஒரு பகுதியை ஈத்காவுக்கு தானம் அளித்து, இந்து மற்றும் முஸ்லிம்கள் இடையேயான உறவை வலுப்படுத்த விரும்பினார். ஆனால் தனது ஆசை நிறைவேறுவதற்கு முன்பாகவே, 2003ஆம் ஆண்டில் லாலா பிரிஜ்னந்தன் பிரசாத் இறந்துவிட்டார்.




தங்களின் 20,424 சதுர அடி நிலத்தை, அவரது சகோதரிகள் தானம் செய்துள்ளனர். இவ்விருவரும் இந்து சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை

## இலங்கைக்கு உதவிய மதுரை யாசகர்



தூத்துக்குடி மாவட்டம் ஆலங்கிணறு பகுதியை சேர்ந்த 50 வயதான பூல்பாண்டி, மதுரையில் யாசகம் எடுத்து வந்தார்.

"முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளன்று ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாயுடன் 52ஆவது தடவையாக வந்த போது, இலங்கை தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென முதலமைச்சர், வேண்டுகோள் விடுத்துள்ளார். அதனால், இந்தப் பணம் இலங்கை தமிழர்களுக்கு சென்றடைய வேண்டும்" என்றார்.

## மீனவர்கள் 19 பேர் சென்னை திரும்பினர்

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இந்திய மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இந்திய மீனவர்கள் 19 பேர், குடும்பங்களுடனும் நண்பர்களுடனும் மீண்டும் இணைவதற்கான பயணம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கையிலிருந்து சென்னைக்கு நேற்று (05) காலை அனுப்பிவைக்கப்பட்டனர் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.



நாசிக்

ஒரு கிராம ஆண்களுக்கு

## பெண் கொடுக்க மறுக்கும் கிராமங்கள்

மராட்டியத்தில் உள்ள குன்றுப்பகுதி கிராமத்துக்கு புதிதாக திருமணமாகி வந்த பெண், குடத்தை அப்படியே போட்டுவிட்டு அம்மா வீட்டுக்குப் போனவர்தான், திரும்பி வரவேயில்லை.

இது ஒரு மணப்பெண்ணின் கதையில்லை. இந்தக் கிராமத்துக்கு எந்தப் பெண்ணும் வாழ்க்கைப்பட்டு வர விரும்புவதில்லை. வந்தாலும் அதிக காலம் கணவருடன் வாழ்வதில்லை. தாண்டிச்சி பாரி என்ற கிராமத்தில் தாண்டவமாடும் கொடுமையான தண்ணீர்ப் பிரச்சினைதான் இதற்குக் காரணம்.



சுமார் 300 பேர் வசிக்கும் இக்கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகும். மார்ச் முதல் ஜூன் வரையிலான கோடை காலத்தில் அது உச்சம் பெறும்.

குன்றின் கிடுகிடு சரிவுப் பாதையில் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் கீழே இறங்க வேண்டும். அடிவாரத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் கண்ணீர் போல தண்ணீர் கசியும் ஒரு பாறை ஊற்றின் முன், மணிக்கணக்கில் தவமிருக்க வேண்டும். சிறிய பாத்திரத்தில் சிறிது சிறிதாய் தண்ணீரை முகர்ந்து குடத்தில் ஊற்றி நிரப்ப வேண்டும். பின்னர் குடத்தை தலையில் வைத்து (சில சமயங்களில் ஒன்றின் மீது ஒன்றாக இரண்டு குடம்) குன்றுப் பாதையில் கவனமாக அடிவைத்து ஏற வேண்டும்.

இங்கு ஒவ்வொரு குடும்பப் பெண்ணின் பிரதான வேலையே தண்ணீர் எடுத்துவருவதுதான்.

# பவர் Toastmasters கழகம் ஸ்தாபிப்பு

தனது ஊழியர்கள் மத்தியில் சிறந்த தொடர்பாடல் திறன் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை கட்டியெழுப்பும் நோக்கில், பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், Baurs Toastmasters Club (BTC) எனும் கழகத்தை நிறுவியிருந்ததுடன், அதன் நிறைவேற்றுக் குழுவின் ஸ்தாபிப்பு வைபவத்தையும் முன்னெடுத்திருந்தது.



கிங்ஸ்பரி ஹோட்டலில் ஏப்ரல் 29 ஆம் திகதி, மங்கல விளக்கேற்றலுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பவர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் கலந்து கொண்டதுடன், மாவட்ட பணிப்பாளர் DTM ஸ்ரீயந்தி சல்காடோ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பவர் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், The Colombo Toastmasters Club இன் தலைவர் DTM சியாமலி ஜயசேகர அடங்கலாக District 82 Toastmasters International அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ரொல்ஃப் ப்லாசர் கருத்துத் தெரிவிக்கையில், "Baurs Toastmasters Club ஸ்தாபிப்பில் கலந்து கொள்ள முடிந்தமை உண்மையில் மிகவும் முக்கியமான தருணமாக அமைந்துள்ளது. எமது பல நிறுவன அங்கத்தவர்களுக்கு வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இது உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், முக்கியமாக நாம் சேவையாற்றும் சமூகங்களுக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்" என்றார்.

Toastmasters International ஐப் பொறுத்தமட்டில், பவர் நிறுவனத்துக்கு புதிய விடயமல்ல. கடந்த காலங்களில் பல பிரிவுகளில் பல்வேறு பேச்சுத்திறன் விருத்தி நிகழ்வுகளை முன்னெடுத்திருந்ததுடன், இதற்கு Colombo Toastmasters Club இன் வழிகாட்டல்களையும் பெற்றிருந்தது.

இந்த நிகழ்வுகளினூடாக நல்லதொரு தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதில் எவ்விதமான சந்தேகங்களும் இல்லை என்பதுடன், பல ஊழியர்களுக்கு திறன்களையும் தன்னம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருந்தது. அதனூடாக, பொதுப் பேச்சுத்திறன் தொடர்பான தமது ஆற்றலை அவர்களால் மேம்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், தொடர்பாடல் பழக்க வழக்கங்கள், உரைகள், உடல் அசைவுகள், கவனமாக செவிமடுத்தல், மதிப்பாய்வு செய்தல் போன்ற திறன்களை மேம்படுத்திக் கொள்ள உதவியிருந்தன. இந்த பயிலல் அனுபவம் என்பது அதிகளவு ஈடுபாட்டுத் திறனை பேணுவதாக அமைந்திருப்பதுடன், தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஆக்கபூர்வமான கருத்துரைப்புகளை அனுபவம் வாய்ந்த Toastmastersகளிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் ஏதுவாக அமைந்திருந்தது.

BTC இன் அங்கத்தவர்களை உள்வாங்குவதை Communication Chair of District 82 DTM சர்மா மகாலிங்கம், பிரதேச பணிப்பாளர் Toastmaster வினோதினி துர்காபக்ஷி ஆகியோர் முன்னெடுத்திருந்தனர்.

Toastmasters இல் EXCO நியமனங்களில் தலைவர் ரசிக அமரசிங்க (முகாமையாளர் - நிர்வாகம்), உபதலைவர் கல்வி ஹர்ஷி விஜேந்திர (சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பயிலல் மற்றும் விருத்தி), உப தலைவர் பொது உறவுகள் மதுஷான் அல்விஸ் (தயாரிப்பு முகாமையாளர், Roche Biotech ஐ பிரதிநிதித்துவப்படுத்தி பவர் ஹெல்த்கெயார் பிரிவு), உப தலைவர் அங்கத்துவம் டாஷியா விஜேயகுலசூரிய (நிறைவேற்று அலுவலக ஒழுங்கிணைப்பாளர்), செயலாளர் சத்துரினி காரியவசம் (பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்/விவசாய பணிப்பாளரின் பிரத்தியேக உதவியாளர்), பொருளாளர் தில்ஷான் வருசமன (உதவி கணக்காளர்) மற்றும் சார்ஜன்ட் காப்பாளர் தீபிகா ராமராஜ் (நிர்வாக நிறைவேற்று அதிகாரி) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

ஒரு வருட காலப்பகுதியில் 125 வருட கால முன்னேற்ற வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை கொண்டாடவுள்ள நிலையில், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, பவர் குடும்பத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. நிறுவனத்தின் தொடர்ச்சியான முயற்சிகளில் இந்த நடவடிக்கை பிரதிபலிப்பாக அமைந்திருப்பதுடன், பரந்தளவு பணியிடத்தை கொண்டிருப்பது மாத்திரமன்றி, தனிநபர் வளர்ச்சி மற்றும் பிரத்தியேக விருத்தி ஆகியவற்றை ஊக்குவிக்கும் சூழலையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.

Transsion Holdings உடன்

# Gestetner–Telkom கைகோர்ப்பு

Gestetner of Ceylon PLC இன் புதிதாக நிறுவப்பட்ட பிரிவான Gestetner-Telkom தொலைத்தொடர்பாடல் உப பிரிவில் பிரவேசித்துள்ளதுடன், உலகின் வேகமாக வளர்ந்து வரும் ஸ்மார்ட்ஃபோன் வர்த்தக நாமங்களில் ஒன்றான TECNO மொபைல்களை இலங்கையில் விநியோகிக்க Transsion Holdings உடன் கைகோர்த்துள்ளது.



'Stop At Nothing' எனும் உயர்ந்த தொனிப்பொருளைக் கொண்டுள்ள முன்னணி ஸ்மார்ட்ஃபோன் வர்த்தக நாமமும், ஸ்மார்ட் சாதனமுமாகவும் திகழும் TECNO, தமது மதிநுட்பமான மற்றும் நவநாகரீகமான வாழ்க்கை முறைகளை இணைப்பதற்கு உலகுக்கு ஸ்மார்ட் சாதனங்களை வடிவமைத்து வழங்குகின்றது. 70 நாடுகளில் TECNO பிரசன்னத்தை கொண்டுள்ளதுடன், 80,000க்கும் அதிகமான விற்பனை பகுதிகளை கொண்டு இயங்குகின்றது. தரவுகள் அடிப்படையில் இயங்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச R&D புத்தாக்க நிலையங்களினூடாக செயலாற்றுவதுடன், தயாரிப்பு வடிவமைப்பு, கமெரா மற்றும் வர்த்தக நாமப் புகழ் போன்றவற்றில் விருது வென்ற தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளது.

மொபைல் தொலைபேசிகள் இறக்குமதியில் TRC இன் அனுமதி பெற்று இயங்கும் Gestetner-Telkom, TECNO மொபைல் ஊடாக இளம் நுகர்வோரை சென்றடைய எதிர்பார்ப்பதுடன், அதற்காக நாட்டின் முக்கியமான பகுதிகளில் பிராந்திய விநியோகத்தர்களைக் கொண்டுள்ளது.

Gestetner of Ceylon PLC இன் தவிசாளர் சயீட் அஸ்சார் கருத்துத் தெரிவிக்கையில், "எமது புதிய பிரிவான 'Gestetner-Telkom'உடன் மொபைல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையினுள் Gestetner of Ceylon PLC பிரவேசித்துள்ளமை தொடர்பில் அறிவிப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். Transsion Holdings மற்றும் TECNO வர்த்தக நாமத்துடன் கைகோர்த்துள்ளதனூடாக, எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தரமான ஸ்மார்ட்ஃபோன் சாதனங்களைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதுடன், விற்பனைக்கு பிந்திய சேவைகளை வழங்கவும் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

Transsion Holdings இன் இலங்கைக்கான பணிப்பாளர் ரே சோ (Ray Chaw) கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் எமது பங்காளராக Gestetner-Telkom ஐ கொண்டுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவர்களின் பல தசாப்த கால அனுபவம் மற்றும் ஒப்பற்ற சேவைகளுடன், நவீன தோற்றம் மற்றும் உத்வேகத்துடன், எமது TECNO தொலைபேசி தெரிவுகளை இளம் பாவனையாளர்கள் மத்தியில் உயர் தெரிவுக்குரிய கையடக்க தொலைபேசிகளாக திகழச் செய்யக்கூடியதாக இருக்கும் என நம்புகின்றோம்" என்றார்.

Gestetner-Telkom இனால் TECNO POP 5 LTE தொலைபேசி ஏப்ரல் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதில் 6.52" HD+ Dot Notch Screen, large 5000 mAh long பற்றரி ஆயுள், 8MP AI இரட்டை பின்புற கமிரா உடன் Dual Flash, 32GB ROM + 2GB RAM, Fingerprint Unlock போன்ற பல உள்ளம்சங்கள் காணப்படுகின்றன.

விரைவில் TECNO Spark 8C தொலைபேசியை அறிமுகம் செய்வதற்கு Gestetner-Telkom திட்டமிட்டுள்ளது. Spark 8C என்பது 6.6" HD+ Dot Notch display, with upto 6GB larger RAM, 5000mAh பற்றிரி, 13MP பின்புற இரட்டைக் கமரா மற்றும் Dual Flashlight உடன் 8MP Selfie கமராவுடன் முன்புற flash மற்றும் IPX2 Splash Resistant ஆகிய அம்சங்கள் காணப்படுகின்றன.

Gestetner-Telkom பொது முகாமையாளர் மஞ்சுள ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "இன்றைய நவீன உலகில், ஸ்மார்ட் சாதனங்களுடன் மக்கள் இணைந்துள்ளனர். Gestetner-Telkom ஐச் சேர்ந்த நாம் அணியாக முன்னேறி, இலங்கையில் TECNO வர்த்தக நாமத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், ஸ்மார்ட் சாதனங்களினூடாக வாழ்வுகளை இணைக்கின்றோம். சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவைகளினூடாக, எமது வாடிக்கையாளர்களை இணைப்பை ஏற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

புத்தாக்கம், தொழில்நுட்ப மற்றும் கலையம்சங்களினூடாக, பரந்த தயாரிப்பு உள்ளம்சங்களைக் கொண்டுள்ள ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் ஸ்மார்ட் AIoT தயாரிப்புகள், போன்றவற்றைக் கொண்டுள்ள TECNO, உலகளாவிய ரீதியில் முன்னேறும் இளம் வாடிக்கையாளர்களின் வளர்ச்சிக்கு கைகொடுக்கக்கூடிய சிறந்த தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்டுள்ளது.

பிரான்ஸ்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிரடி முடிவு

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கூட்டமானது நேற்று முன்தினம் (04) பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், ரஷ்யா மீதான 6ஆம் கட்டப் பொருளாதாரத் தடை




விதிப்பது குறித்து பரிந்துரைகளை முன்வைத்தார்.

இதனையடுத்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ரஷ்ய அரசு நடத்தும் தொலைக்காட்சி சேவைகளை ஒளிபரப்பத் தடை விதிக்கப்படும் என்றும், ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை 6 மாதத்தில் நிறுத்த வேண்டும் எனவும், ரஷ்யாவிடமிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறுத்த வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் ஸ்விப்ட் சர்வதேச வங்கி பணம் செலுத்துதல் அமைப்பிலிருந்து ரஷ்யாவின் பெரிய வங்கியான ஸ்பெர்பேங்கை நீக்கவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புட்டினுக்கு புற்றுநோய்?



உக்ரேன் மீது ரஷ்யா தீவிரமாகத் தாக்குதல் நடத்திவரும்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் உடல் நிலை குறித்து வெளியான தகவல் ஒன்று உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே புட்டினுக்கு, பார்கின்சன் நோய் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் தற்போது அவர் புற்றுநோய்க்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே சமயம் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு உடனான கலந்துரையாடலின்போது மேசையை இறுக்கமாகப் புட்டின் பிடித்துக் கொண்டிருக்கும் வீடியோ அண்மையில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெய்ஜிங்:

# பெய்ஜிங்கில் 10 சதவீத ரயில் நிலையங்கள் மூடல்

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹான் நகரில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் வியாபித்தது.

இந்நிலையில் சீனாவில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது. கொரோனா பரவல் காரணமாக ஒரு மாத காலத்துக்கும் மேல் ஷாங்காய் நகரில் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், தலைநகர் பெய்ஜிங்கில் 10 சதவீத மெட்ரோ ரயில் நிலையங்களும் (சுரங்க ரயில் நிலையங்கள்) பஸ் நிலையங்களும் மூடப்பட்டு உள்ளன.

பெய்ஜிங்கில் உள்ள 40 ஆக்கும் மேற்பட்ட மெட்ரோ சுரங்க ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேலும் 158 பஸ் வழித்தடங்களில் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பெய் ஜிங்கில் வீடு வீடாக கொரோனா பரிசோதனையை சுகாதாரத் துறை ஊழியர்கள் கடந்த சில நாட்களாகத் தொடங்கியுள்ளனர். அங்குள்ள பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்களும் அடைக்கப்பட்டுள்ளன.



உகாண்டா

# பஸ் விபத்தில் 20 பேர் மரணம்

கிழக்கு ஆபிரிக்க நாடான உகாண்டாவின் மேற்கு பகுதியில் போர்டல் என்ற நகர் அமைந்துள்ளது.

இப்பகுதியில் இருந்து அந்நாட்டின் தலைநகரான கம்பாலாவுக்கு சுமார் 30 க்கும் மேற்பட்ட பணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த தோட்டத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் (4) இடம்பெற்ற இக்கோர விபத்தில் பஸ்ஸில் பயணித்த 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் , பலர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலில்

# இப்படியும் உலக சாதனையா?





100 வயதான முதியவர், 84 ஆண்டுகளாக ஒரே நிறுவனத்தில் பணியாற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

பிரேஸிலின் புருஸ்க்யூ நகரில் உள்ள ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றி வந்த வோல்டர் ஆர்த்மன் என்பவரே இச்சாதனையைப் படைத்துள்ளார்.

குறித்த நிறுவனத்தில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து, விற்பனை மேலாளராக உயர்ந்துள்ள அவர், 100 வயதிலும் அதே உற்சாகத்துடன் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி திரட்டிய 'ஸ்பைடர் மேன்' கைது



அமெரிக்காவில், கருக்கலைப்பை குற்றமாக்கும் சட்டவரைவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக 61 மாடி கட்டடத்தில் ஏறிய இளைஞரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அமெரிக்க உச்ச நீதிமன்றம், கருக்கலைப்பை குற்றமாக்கும் சட்டவரைவை இயற்றி வரும் நிலையில், கடந்த 3 ஆம் திகதி மேய்சன் டெஸ்சாம்ப்ஸ் என்ற 22 வயது கல்லூரி மாணவர், கருக்கலைப்புக்கு எதிரான தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டுவதற்காக, சான் பிரான்சிஸ்கோ நகரின் உயரமான கட்டிடமாக கருதப்படும் சேல்ஸ் பேர்ஸ் டவர் மீது ஸ்பைடர் மேனைப் போல் ஏறினார். பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

சீனா

# சீனாவில் போக்குவரத்து சேவைகள் நிறுத்தம்

சீனாவில் அண்மைக் காலமாகக் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக, அந்நாட்டின் வர்த்தக நகரமான ஷாங்காயில் ஒருமாத காலமாகக் கொரோனாத் தொற்று உச்சத்திலிருந்து வருகிறது. இதன் காரணமாக அங்கு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதோடு கடும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தற்போது அந்நாட்டின் தலைநகரான பீஜிங்கிலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பீஜிங்கில் பகுதி அளவுக்குப் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அந்நகரிலுள்ள 40க்கும் அதிகமான சுரங்க ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் 158 பகுதிகளில் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் றெயில் சேவைகளும் மட்டுப்படுத்தப்ப ட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டு உள்ளதோடு உணவகங்கள் செயற்படவும் தடைவிதிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சம்பியன்ஸ் லீக்: சிற்றியை வீழ்த்தி

# இறுதி போட்டியில் றியல் மட்ரிட்

சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியுடனான அரையிறுதிப் போட்டியில் 6-5 என்ற மொத்த கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியின் இறுதி நிமிடம் வரையில் றியாட் மஹ்ரேஸ் பெற்ற கோலால் சிற்றி முன்னிலையில் இருந்த நிலையில், 90ஆவது நிமிடத்தில் றொட்றிகோ பெற்ற இரண்டு கோல்களால் கோலெண்ணிக்கையைச் சமப்படுத்தி, மேலதிக நேரத்தில் கரிம் பென்ஸீமாவின் பெனால்டியுடன் 3-1 என்ற ரீதியில் மட்ரிட் வென்றிருந்தது.



# யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் றொனால்டோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, அக்கழகமானது சம்பியன்ஸ் லீக்குக்கு தகுதி பெறாமையானது ஏறத்தாழ உறுதியாகியுள்ளமையால் கழகத்தை விட்டு வெளியேறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

37 வயதான றொனால்டோ, தனது முன்னாள் கழகமான ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் அல்லது பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.






# சமாதான வெற்றிக் கிண்ண கடினபந்து கிரிக்கெட் தொடர்

ஏ.எல்.எம். ஷினாஸ்

நோன்புப் பெருநாளை முன்னிட்டு மருதமுனை றெட் விங்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் சமாதான வெற்றிக் கிண்ணம் - 2022 கடினபந்து கிரிக்கெட் தொடரானது, கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இன்று, நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் ஐந்து ஓவர்கள் கொண்ட இத்தொடரில், அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 24 அணிகள் விளையாடவுள்ளன.

தொடரில் சம்பியனாகும் அணிக்கு 30,000.00 ரூபாய் பணப்பரிசும், இரண்டாம் இடத்தை பெற்றுக் கொள்ளும் கழகத்துக்குகு 17,000.00 ரூபாய் பணப்பரிசும், மூன்றாமிடத்தை பெற்றுக் கொள்ளும் அணிக்கு 7000.00 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணங்களும் பரிசளிப்பு நிகழ்வின்போது வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியூனிச்சுடனான ஒப்பந்தத்தை நீடித்த மல்லர்



ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான தோமஸ் மல்லர், அக்கழகத்துடனான தனது ஒப்பந்தத்தை ஓராண்டால் நீடித்துள்ளார்.

அந்தவகையில், மியூனிச்சுக்காக எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரையில் மல்லர் விளையாடவுள்ளார்.

ஆக, 10 வயதில் மியூனிச்சுடன் இணைந்த மல்லர், 24 ஆண்டுகளை அக்கழகத்துடன் செலவிடவுள்ளார்.

இதுவரையில் 412 போட்டிகளில் விளையாடி 136 கோல்களை மல்லர் பெற்றுள்ளார்.

ஐ.பி.எல்

# சென்னையை வென்ற பெங்களூர்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பெங்களூர், மஹிபால் லொம்ரோரின் 42 (27), அணித்தலைவர் பப் டு பிளெஸியின் 38 (22), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 26 (17), ரஜாட் படிடாரின் 21 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மகேஷ் தீக்‌ஷன 4-0-27-3, மொயின் அலி 4-0-28-2, இரவீந்திர ஜடேஜா 4-0-20-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை சார்பாக டெவோன் கொன்வே 56 (37), மொயின் அலி 34 (27), ருத்துராஜ் கைகவாட் 28 (23) ஓட்டங்களைப் பெற்றபோதும், ஷபாஸ் அஹ்மட், கிளென் மக்ஸ்வெல் (2), வனிடு ஹஸரங்க, ஹர்ஷாப் பட்டேல் (3), ஜொஷ் ஹேசில்வூட்டிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களையே பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹர்ஷால் பட்டேல் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸும், மும்பை இந்தியன்ஸும் மோதவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 06 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது

CLICK

